01-09-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 25.11.2001

ஆசிர்வாதங்களைக் கொடுங்கள், ஆசிர்வாதங்களைப் பெறுங்கள், காரணத்தை நிவாரணமாக்கி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள்

இன்று அன்புக்கடல் பாப்தாதா தம்முடைய அன்பு சொரூபக் குழந்தைகளின் அன்பெனும் கயிற்றில் பிணைக்கப்பட்டு சந்திப்பைக் கொண்டாட வந்துள்ளார். குழந்தைகள் அழைத்தார்கள், மற்றும் பிரபு ஆஜராகி விட்டார். அவ்யக்த சந்திப்பையோ கொண்டாடிக் கொண்டே இருக்கிறார் கள். பிறகும் கூட சாகாரத்தில் அழைத்தார்கள் என்றால் பாப்தாதா குழந்தைகளின் பெரிய திருவிழாவில் வந்து சேர்ந்து விட்டார். பாப்தாதாவுக்குக் குழந்தைகளின் சிநேகம், குழந்தை களின் அன்பைப் பார்த்துக் குஷி ஏற்படுகிறது. மற்றும் மனதிற்குள் நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்காகப் பாடல் பாடுகிறார் -- ஆஹா சிரேஷ்ட பாக்கியவான் குழந்தைகளே ஆஹா! இத்தனைப் பெரிய பாக்கியம் மற்றும் இவ்வளவு சாதாரண ரூபத்தில் சகஜமாகப் பிராப்தி ஆகிறது என்றால் இதைக் கனவில் கூட நினைத்துப் பார்த்ததில்லை. ஆனால் இன்று சாகார ரூபத்தில் பாக்கியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதா பார்த்துக் கொண்டி ருக்கிறார் - தொலைவில் அமர்ந்திருந்தாலும் குழந்தைகள் சந்திப்பின் திருவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா அவர்களைப் பார்த்து சந்திப்பைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார். மெஜாரிட்டி மாதர்களுக்குப் பொன்னான வாய்ப்பு கிடைத்துள்ளது. பாப்தாதாவுக்கும் விசேஷ சக்தி சேனையைப் பார்த்துக் குஷி ஏற்படுகிறது - நான்கு சுவர் களுக்குள் இருக்கும் மாதர்கள் பாபா மூலம் விஷ்வ கல்யாணகாரி ஆகி, உலகத்தின் ராஜ்ய அதிகாரி ஆகி விட்டார்கள். ஆகி விட்டார்களா, ஆகிக் கொண்டிருக்கிறார்களா? என்ன சொல்வீர் கள்? ஆகி விட்டீர்கள் இல்லையா? உலக ராஜ்யத்தின் வெண்ணெய் உருண்டை உங்கள் அனைவரின் கைகளில் உள்ளது இல்லையா? பாப்தாதா பார்த்தார் - மதுபன் வந்து சேர்ந்துள்ள மாதர்கள் அனைவருக்கும் ஒரு விஷயத்தின் குஷி அதிகம் உள்ளது. என்ன குஷி அது? அதாவது பாப்தாதா மாதர்களாகிய நம்மை விசேஷமாக அழைத்துள்ளார். ஆக, மாதர்கள் மீது விசேஷ அன்பு உள்ளது இல்லையா? நஷாவுடன் சொல்கிறார்கள் - பாப்தாதா அழைத்துள்ளார். நம்மை அழைத்துள்ளார், நாம் ஏன் வர மாட்டோம்? பாப்தாதாவும் அனைவரின் ஆன்மிக உரையாடலைக் கேட்டுக் கொண்டே இருக்கிறார். இந்தக் குஷியின் நஷாவைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார். பாண்டவர்களும் கூட குறைந்தவர்கள் கிடையாது. பாண்டவர்கள் இல்லாமல் உலகத்தின் காரியத்தினுடைய முடிவு வர முடியாது. ஆனால் இன்று விசேஷமாக மாதர்களைப் பாண்டவர்களும் கூட முன்னால் வைத்துள்ளார்கள்.

பாப்தாதா குழந்தைகள் அனைவருக்கும் மிகவும் சுலபமான புருஷார்த்தத்திற்கான விதி சொல்லிக் கொண்டிருக்கிறார். மாதர்களுக்கு சுலபமானது வேண்டும் இல்லையா? எனவே பாப்தாதா மாதர்கள், குழந்தைகள் அனைவருக்கும் சொல்கிறார், அனைத்திலும் சுலபமான புருஷார்த்தத்திற்கான சாதனம் - நடமாடும் போதும் சுற்றி வரும் போதும் சம்பந்தம்-தொடர்பில் வரும் போதும் ஒவ்வோர் ஆத்மாவுக்கும் மனதால் சுப பாவனையின் ஆசிர்வாதங் கள்

கொடுங்கள் மற்றும் மற்றவர்களிடம் இருந்தும் ஆசிர்வாதங்களைப் பெறுங்கள். உங்களுக்கு யார் எதைக் கொடுத்தாலும், சாபமே கொடுத்தாலும் நீங்கள் அந்த சாபத்தையும் கூட உங்கள் சுப பாவனையின் சக்தியால் ஆசிர்வாதமாக மாற்றி விடுங்கள். உங்கள் மூலமாக ஒவ்வோர் ஆத்மாவுக்கும் ஆசிர்வாதம் அனுபவமாகட்டும். அந்தச் சமயம் அனுபவம் செய்யுங்கள் - யார் சாபம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் ஏதேனும் விகாரத்தின் வசமாக இருக்கிறார்கள். வசமாகி விட்ட ஆத்மாவுக்காக, அல்லது வேறு (மாயா) வசமான ஆத்மாவுக்காக ஒரு போதும் சாபம் வெளிப்படாது. அவருக்காக சதா சகயோகம் கொடுப்பதற்கான ஆசிர்வாதம் வெளிப்படும். ஒரு விஷயத்தை மட்டும் நினைவு வையுங்கள் - நாம் நிரந்தரமாக ஒரு காரியத்தை மட்டுமே செய்ய வேண்டும் - சங்கல்பத்தின் மூலம், பேச்சின் மூலம், கர்மத்தின் மூலம், சம்பந்தம்-தொடர்பின் மூலம் ஆசிர்வாதங்களைக் கொடுக்க வேண்டும் மற்றும் ஆசிர்வாதங்களைப் பெற வேண்டும். எந்த ஓர் ஆத்மாவுக்காகவும் எந்த ஒரு வீணான சங்கல்பம் வந்தாலும் இதை நினைவு வையுங்கள் - எனது கடமை என்ன? எப்படி எங்காவது நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது மற்றும் நெருப்பை அணைப்பவர் கள் இருப்பார்காளானால் அவர்கள் நெருப்பைப் பார்த்து நீரை ஊற்றுவதற்கான தங்களின் காரியத்தை மறக்க மாட்டார்கள். அவர்களுக்கு நினைவி ருக்கும் - நாம் நீரை ஊற்றுபவர்கள், நெருப்பை அணைப்பவர்கள், அது போல் யாராவது எந்த ஒரு விகாரத்தின் நெருப்பு வசமாகி ஏதேனும் அத்தகைய காரியம் செய்கிறார்கள், அது உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் நீங்கள் உங்கள் கடமையை நினைவு வையுங்கள், எனது கடமை - எந்த ஒரு நெருப்பையும் அணைப்பதற்கான, ஆசிர்வாதம் கொடுப்பதற்கானது. சுப பாவனையின், பாவனைக்கான சகயோகம் கொடுப்பதற்கானது. இந்த ஒரு வார்த்தையை நினைவு வையுங்கள், மாதர்கள் சகஜமாக ஒரு வார்த்தையை நினைவு வைக்க வேண்டும் -- ஆசிர்வாதம் கொடுங்கள், ஆசிர்வாதம் பெறுங்கள். மாதர்கள் இதைச் செய்ய முடியுமா? (மாதர்கள் அனைவரும் கை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள்) செய்ய முடியுமா அல்லது செய்தே ஆக வேண்டுமா? பாண்டவர்கள் செய்ய முடியுமா? பாண்டவர்கள் சொல்கிறார்கள் -- செய்தே ஆக வேண்டும். பாடப்பட்டுள்ளது - பாண்டவர் என்றால் சதா வெற்றியாளர் மற்றும் சக்திகள், சதா விஷ்வ கல்யாண்காரி என்ற பெயரால் புகழ் பெற்றவர்கள்.

பாப்தாதாவுக்கு நாலாபுறம் உள்ள குழந்தைகளிடம் இது வரை ஓர் ஆசை இருந்துள்ளது. அது என்ன ஆசை எனச் சொல்லட்டுமா? அறிந்து கொண்டு விட்டீர்கள். டீச்சர்கள் அறிந்து கொண்டீர்களா? குழந்தைகள் அனைவரும் தங்கள் சக்திக்கேற்றவாறு புருஷார்த்தமோ செய்து கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதா புருஷார்த்தத்தைப் பார்த்துப் புன்சிரிக்கிறார். ஆனால் ஓர் ஆசை இது -- புருஷார்த்தத்தில் இப்போது தீவிர வேகம் வேண்டும். புருஷார்த்தம் உள்ளது, ஆனால் இப்போது அதில் தீவிர வேகம் வேண்டும். இதற்கான விதி -- காரணம் என்ற சொல் முடிந்துவிட வேண்டும் மற்றும் சதா நிவாரண சொரூபம் ஆகிவிட வேண்டும். காரணமோ சமயத்திற்கேற்றவாறு ஆகத் தான் செய்கிறது மற்றும் ஆகிக் கொண்டே இருக்கும். ஆனால் நீங்கள் அனைவரும் நிவாரண சொரூபம் ஆகுங்கள். ஏனென்றால் குழந்தைகள் நீங்கள் அனைவரும் உலகிற்கு நிவாரணம் செய்து அனைவரையும், பெரும்பாலான ஆத்மாக்களை நிர்வாணதாமத்திற்கு அனுப்ப வேண்டும். இப்போது உலகத்தின் ஆத்மாக்கள் முக்தியை விரும்புகிறார்கள். எனவே பாபாவின் மூலம் .முக்திக்கான ஆஸ்தியைக்

கிடைக்கச் செய்வதற்கு நிமித்தமானவர்கள் நீங்கள். ஆக, நிமித்த ஆத்மாக்கள் முதலில் தன்னை வெவ்வேறு பிரச்சினைகளின் காரணத்திற்கு நிவாரணம் செய்து விடுவித்துக் கொள்வீர் களானல் அப்போது உலகிற்கு முக்தியின் ஆஸ்தி கிடைக்கும். ஆக, விடுபட்டு விட்டீர்களா? எந்த விதமான பிரச்சினையின் காரணமாகவும் முன்பு வந்ததில்லை, இது தான் காரணம், இது தான் காரணம், இது தான் காரணம், காரணம் ஏதேனும் எதிர்கொள்கிறது (உருவாகிறது) என்றால் அந்தக் காரணத்துக்கான நிவாரணத்தை ஒரு விநாடியில் யோசியுங்கள். இதை யோசியுங்கள் -- எப்போது உலகிற்கு நிவாரணம் செய்பவனாக நான் இருக்கிறேனோ. அப்போது தன்னுடைய சிறு-சிறு பிரச்சினைகளுக்கு சுயம் நிவாரணம் செய்ய முடியாதா? செய்ய முடியாதா? இப்போதோ ஆத்மாக்களின் வரிசை உங்கள் முன்னால் வரும். ஹே முக்தியின் வள்ளலே முக்தி கொடுங்கள். ஏனென்றால் முக்தி வள்ளலின் நேரடிக் குழந்தைகள், அதிகாரி குழந்தைகள் நீங்கள். மாஸ்டர் முக்தி வள்ளல் இல்லையா? ஆனால் வரிசைக்கு முன்னால் மாஸ்டர் முக்தி வள்ளல்களாகிய உங்கள் பக்கம் தடையாக ஒரு கதவு மூடப்பட்டுள்ளது. புருஷார்த்தத்தில் பலவீனமான புருஷார்த்தத்தின் ஒரு வார்த்தையின் கதவு உள்ளது. அது ஏன் என்பதாகும். கேள்விக்குறி (?) ஏன், இந்த ஏன் என்ற வார்த்தை இப்போது வரிசையை முன்னால் கொண்டு வருவதில்லை. ஆக, பாப்தாதா இப்போது தேசம், விதேச அனைத்துக் குழந்தை களுக்கும் இதை நினைவு படுத்திக் கொண்டிருக்கிறார்- நீங்கள் பிரச்சினையின் கதவாகிய ஏன் என்பதை இப்போது முடித்து விடுங்கள். செய்ய முடியுமா? டீச்சர்கள் செய்ய முடியுமா? பாண்டவர்கள் செய்ய முடியுமா? அனைவரும் கை உயர்த்திக் கொண்டிருக்கிறார்களா அல்லது ஒரு சிலர் மட்டுமா? வெளிநாட்டினரோ எவர்-ரெடியாக இருக்கிறீர்கள் இல்லையா? ஆமாவா இல்லையா? ஆம் என்றால் நேராகக் கை உயர்த்துங்கள். சிலர் இப்படி-இப்படிச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது எந்த ஒரு சேவா கேந்திரத்திலும் பிரச்சினையின் பெயர்-அடையாளம் இருக்கக் கூடாது. அது போல் இருக்க முடியுமா? ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும் - நான் செய்தாக வேண்டும். டீச்சர்கள் புரிந்து கொள்ள வேண்டும் - நான் செய்தாக வேண்டும். இல்லறத்தில் இருப்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் - நான் செய்தாக வேண்டும். மதுபனில் உள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் - நான் செய்தாக வேண்டும். செய்ய முடியும் இல்லையா? பிரச்சினை என்ற வார்த்தையே முடிந்துவிட வேண்டும். காரணம் முடிந்து நிவாரணம் வந்து விட வேண்டும். இது நடைபெற முடியுமா? முதல்-முதலில் ஸ்தாபனையின் சமயத்தில் வரக்கூடிய குழந்தைகள் அனைவரும் என்ன உறுதிமொழி கொடுத்தார்கள்? மற்றும் செய்து காட்டினார்கள்? நடக்க முடியாததையும் நடத்திக் காட்டினார் கள். நடத்திக் காட்டினார்கள் இல்லையா? ஆக, இப்போது எத்தனை வருடங்கள் ஆயின? ஸ்தாபனை ஆகி எத்தனை வருடங்கள் ஆயின? (தற்போது 88) ஆக, இத்தனை வருடங்களில் நடக்க முடியாதது நடக்கக் கூடியதாக ஆக முடியாதா? நடக்க முடியுமா? முக்கிய டீச்சர்கள் கை உயர்த்துங்கள். பஞ்சாப் கை உயர்த்தவில்லை. சந்தேகம் உள்ளதா என்ன? கொஞ்சம் யோசிக்கிறார்கள். யோசிக்க வேண்டாம். செய்தே ஆக வேண்டும். மற்றவர்களைப் பற்றி யோசிக்காதீர்கள். ஒவ்வொருவரும் தன்னைப்பற்றி யோசியுங்கள். தன்னைப் பற்றி யோசிக்க முடியும் இல்லையா? மற்றவர்களை விடுங்கள். தன்னைப் பற்றி யோசித்துத் தனக்காகவோ தைரியம் வைக்க முடியும் இல்லையா? அல்லது

முடியாதா? வெளிநாட்டினர் வைக்க முடியுமா? (கை உயர்த்தினார்கள்) வாழ்த்துகள்! நல்லது, இப்போது யார் புரிந்து கொள்கிறார் களோ, அவர்கள் மனப்பூர்வமாகக் கை உயர்த்த வேண்டும். சும்மா காண்பிப்பதற்காக அல்ல. எல்லாரும் கை உயர்த்துகிறார்கள் என்றால் நானும் கை உயர்த்துவேன் என்று அப்படி இல்லை. காரணத்தை முடித்து நிவாரண சொரூபம் ஆகியே தீர வேண்டும் என்று மனப்பூர்வமாக திட சங்கல்பம் செய்வீர்களானால், எது நடந்தாலும் சரி, சகித்துக் கொள்ள வேண்டிய திருக்கும், மாயாவை எதிர்கொள்ள வேண்டியதிருக்கும், ஒருவர் மற்றவரின் சம்பந்தம்-தொடர்பில் சகித்துக் கொள்ளவும் நேரிடும், நான் பிரச்னையை உருவாக்கக் கூடாது. முடியுமா? திட நிச்சயம் இருக்குமானால் அவர்கள் பின்னால் இருந்து தொடங்கி முன்னால் வரை கை உயர்த்துங்கள். (பாப்தாதா அனைவரையும் கை உயர்த்தச் செய்தார் மற்றும் காட்சி முழுவதையும் டி.வி.யில் பார்த்தார்) நல்லது இல்லையா, எக்ஸர்ஸைஸ் ஆகி விட்டது. கையை அதனால் தான் உயர்த்துகின்றனர் - ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கை உயர்த்து வதில் ஊக்கம் வருகிறது இல்லையா? அதே போல் எப்போதெல்லாம் ஏதேனும் பிரச்சினை வருகிறதோ, முன்னால் பாப்தாதாவைப் பார்க்க வேண்டும். மனதார பாபா எனச் சொல்ல வேண்டும். பாபா ஆஜராகி விடுவார். பிரச்சினை முடிந்து போய் விடும். பிரச்சினை முன்னால் இருந்து விலகி விடும். பாப்தாதா முன்னால் ஆஜராகி விடுவார். மாஸ்டர் சர்வசக்திவான் என்ற தனது இந்த டைட்டிலை ஒவ்வொரு நேரமும் நினைவு செய்யுங்கள். இல்லையென்றால் பாப்தாதா இப்போது யாத் ப்யாரில் மாஸ்டர் சர்வசக்திவான் எனச் சொல்லாமல் சக்திவான் எனச் சொல்லட்டுமா? சக்திவான் குழந்தைகளுக்கு யாத் ப்யார், நன்றாக இருக்கிறதா? மாஸ்டர் சர்வசக்திவான்! மாஸ்டர் சர்வசக்திவான் என்ன தான் செய்ய முடியாது? தனது டைட்டில் மற்றும் காரியத்தை மட்டும் நினைவு வையுங்கள். டைட்டில் - மாஸ்டர் சர்வசக்திவான் மற்றும் காரியம் - விஷ்வ கல்யாண்காரி. ஆக, சதா தனது டைட்டில் மற்றும் காரியத்தை நினைவு செய்வதன் மூலம் சக்திகள் இமர்ஜ் ஆகி விடும். மாஸ்டர் ஆகுங்கள், சக்திகளுக்கும் மாஸ்டர் ஆகுங்கள். கட்டளை இடுங்கள், ஒவ்வொரு சக்திக்கும் தக்க சமயத்தில் கட்டளை இடுங்கள். சக்திகளை தாரணை செய்யவும் செய்கிறீர்கள். இருந்தாலும் இது மட்டும் குறைவாகி விடுகிறது -- சமயத்தில் பயன்படுத்த வருவதில்லை. சமயம் முடிந்த பிறகு நினைவு வருகிறது -- இது போல் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்று. இப்போது அப்பியாசம் செய்யுங்கள் - என்னென்ன சக்திகள் நிறைந்துள்ளனவோ, அவற்றைச் சரியான சமயத்தில் பயன்படுத்துங்கள். எப்படி இந்தக் கர்மேந்திரியங்களைக் கட்டளைப்படி நடத்து கிறீர்கள் இல்லையா, கைகளை, கால்களை நடத்துகிறீர்கள் இல்லையா? அது போல் ஒவ்வொரு சக்தியையும் கட்டளைப்படி நடத்துங்கள். காரியத்தில் ஈடுபடுத்துங்கள். நிறைத்து வைத்துக் கொள்கிறீர்கள். காரியத்தில் குறைவாக ஈடுபடுத்துகிறீர்கள். சமயத்தில் காரியத்தில் ஈடுபடுத்து வதன் மூலம் சக்தி தனது காரியத்தை அவசியம் செய்யும். மேலும் குஷியாக இருங்கள். சில நேரம் குழந்தைகள் சிலரின் முகம் மிகவும் யோசனை-சிந்தனைகளில் கொஞ்சம் அதிகம் தீவிரமாகக் காணப்படுகிறது. குஷியாக இருங்கள், நடனமாடுங்கள், உங்கள் பிராமண வாழ்க்கையே குஷியில் நடனமாடுவதற்கும் தனது பாக்கியம் மற்றும் பகவானின் பாடலைப் பாடுவதற்குமானது. ஆடவும் பாடவும் தெரிந்தவர்கள் ஈடுபாட்டுடன் ஆடுவார்கள், பாடுவார்கள். இருந்தாலும் எனக்கு அவ்வளவாக நடனமாட

வருவதில்லை, பாட வருவதில்லை என்று சொல்வார்கள். கம்பீரத் தன்மை என்பது நல்லது தான். இருந்தாலும் அளவுக்கதிகமாக ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிப் போய் விட்டால், அதில் வேறு சிந்தனைகளும் கலந்துவிடக் கூடும். பாப்தாதாவோ இப்போது கேட்டார் - டில்லியில் திறப்புவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது (9 டிசம்பர் 2001 டில்லி குருகிராமில் ஓம் சாந்தி ரிட்ரீட் சென்டர் திறக்கப் பட்டது) ஆனால் பாப்தாதா இப்போது எந்தத் திறப்புவிழாவைப் பார்க்க விரும்புகிறார்? அந்தத் தேதியையோ தீர்மானம் செய்யுங்கள். இந்தச் சின்ன-பெரிய திறப்பு விழாக்களோ நடந்து விடும். ஆனால் பாப்தாதா விரும்பும் திறப்புவிழா - அனைத்துலகின் ஸ்டேஜ் மீது பாபாவுக்கு சமமாக சாட்சாத் ஃபரிஸ்தாக்கள் முன்னால் வந்துவிட வேண்டும், திரை விலகிவிட வேண்டும். அத்தகைய திறப்புவிழா உங்கள் அனைவருக்கும் கூட பிடித்திருக்கிறது இல்லையா? ஆன்மிக உரையாடலிலும் அனைவரும் சொல்லிக் கொண்டே இருக்கின்றனர், பாபாவும் கேட்டுக் கொண்டே இருக்கிறார். இப்போது இந்த ஆசை தான் உள்ளது - பாபாவைப் பிரத்தியட்சம் செய்ய வேண்டும் மற்றும் பாபாவின் ஆசை - முதலில் குழந்தைகள் பிரத்தியட்சம் ஆக வேண்டும். பாபா குழந்தைகளோடு கூடவே பிரத்தியட்சம் ஆவார். தனியாக இல்லை. ஆக, பாப்தாதா அந்தத் திறப்புவிழாவைப் பார்க்க விரும்புகிறார். ஊக்கமும் நன்றாக உள்ளது. ஆன்மிக உரையாடல் செய்யும் போது அனைவரின் ஊக்கமும் மிக நன்றாக உள்ளது. ஆனால் கர்மயோகி ஆகும் போது கொஞ்சம் வித்தியாசமாகி விடுகிறது. ஆக, மாதர்கள் என்ன செய்வார்கள்? மாதர்களின் கூட்டம் பெரியது. மேலும் மாதர்களைப் பார்த்து பாப்தாதாவுக்கு மிகுந்த குஷி ஏற்படுகிறது. யாரும் மாதர்களை இவ்வளவு முன்னால் கொண்டு வந்ததில்லை. ஆனால் பாப்தாதா மாதர்கள் முன்னேறிச் செல்வதைப் பார்த்துக் குஷி அடைகிறார். மாதர்களுக்கு விசேஷமாக இந்த சங்கல்பம் உள்ளது - எதை யாரும் செய்து காட்ட வில்லையோ, அதை மாதர்கள் நாங்கள் பாபாவோடு கூடவே செய்து காட்டுவோம். செய்து காட்டுவீர்களா? இப்போது ஒரு கையால் தட்டுங்கள் (ஒரு கையை அசைத்துக் காட்டுங்கள்) மாதாக்கள் அனைத்தையும் செய்ய முடியும். மாதாக்களிடம் ஊக்கம் நன்றாக உள்ளது. எதையுமே புரியாமல் இருந்தாலும் சரி, இதையோ புரிந்து கொண்டு விட்டீர்கள் இல்லையா? என்னுடைய பாபா என்று அனைவருமே சொல்கிறீர்கள் இல்லையா? மனதால் இதே பாடலைப் பாடிக் கொண்டே இருங்கள் - மேரா பாபா, மேரா பாபா, மேரா பாபா..... நல்லது.

இப்போது ஒரு விநாடி பாப்தாதா தருகிறார். அனைவரும் விழிப்புணர்வோடு அமருங்கள். பாப்தாதாவிடம் அனைவருக்கும் அன்பு 100 சதவிகிதம் உள்ளது இல்லையா? அன்போ சதவிகிதத்தில் இல்லை அல்லவா? 100 சதவிகிதம் உள்ளதா? அப்படியானால் 100 சதவிகிதம் அன்புக்கான பிரதிபலன் தருவதற்குத் தயாராக இருக்கிறீர்களா? 100 சதவிகிதம் அன்பு உள்ளது இல்லையா? யாருக்குக் கொஞ்சம் குறைவாக உள்ளதோ, அவர்கள் கை உயர்த்துங்கள். பின்னால் சேமிப்பாகி விடும். குறைவாக உள்ளது என்றால் கை உயர்த்துங்கள். 100 சதவிகிதம் அன்பு இல்லை என்றால் அவர்கள் கை உயர்த்துங்கள். அன்பின் விஷயத்தைச் சொல்கிறோம். (ஓரிருவர் கை உயர்த்தினார்கள்) நல்லது, அன்பு இல்லை என்றால் பரவாயில்லை. அது ஆகி விடும். எங்கே செல்வீர்கள்? அன்போ செய்ய வேண்டியதாக இருக்கும். நல்லது, இப்போது அனைவரும் விழிப்புணர்வோடு அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? இப்போது அனைவரும் அன்புக்குப் பிரதிபலனாக ஒரு விநாடி பாபாவுக்கு முன்னால் உள்முக நோக்கு

உள்ளவராகி, தனக்குத் தானே மனதார சங்கல்பம் செய்ய முடியும் - அதாவது இப்போது நான் தனக்காகவோ மற்றவர்களுக்காகவோ பிரச்சினையாக ஆக மாட்டேன். இந்த திட சங்கல்பத்தை அன்புக்குப் பிரதிபலனாகச் செய்ய முடியுமா? எது நடந்தாலும் சரி, ஏதேனும் நடந்தே விட்டாலும் கூட ஒரு விநாடியில் தன்னை மாற்றிக் கொள்வேன் என்று யார் புரிந்து கொள்கிறார்களோ, அவர்கள் திட சங்கல்பம் செய்யுங்கள், திட சங்கல்பம் செய்ய முடிந்தவர்கள். பாப்தாதா உதவி செய்வார். ஆனால் உதவி பெறுவதற்கான விதி -- திட சங்கல்பத்தின் ஸ்மிருதி. பாப்தாதாவுக்கு முன்னிலையில் சங்கல்பம் எடுத்திருக்கிறீர்கள். இந்த ஸ்மிருதியின் விதி உங்களுக்கு சகயோகம் கொடுக்கும். ஆக, செய்ய முடியுமா? தலையை அசையுங்கள். பாருங்கள், சங்கல்பத்தினால் என்ன தான் நடக்க முடியாது? பயப்படாதீர்கள் பாப்தாதாவின் அதிகப்படி யான உதவி கிடைக்கும். நல்லது.

அது போன்ற தீவிர புருஷார்த்தி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா பாபாவின் அன்புக்கான பிரதிபலன் அளிக்கக்கூடிய தைரியவான் குழந்தைகளுக்கு, சதா தங்களின் விசேஷதாக்கள் மூலம் மற்றவர்களையும் விசேஷ ஆத்மாக்களாக ஆக்கக்கூடிய புண்ணிய ஆத்மாக்களாகிய குழந்தைகளுக்கு, சதா பிரச்சினைகளுக்கான தீர்வு சொரூபமாகி விசேஷமாக முன்னேறிப் பறக்கக்கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

விடைபெறும் சமயத்தில்: இன்று விசேஷமாக யார் மதுபனில் மேலே செக்யுரிட்டியின் காரியத்தில் (பாதுகாப்புப் பணி) பிஸியாக இருக்கிறார்களோ, அவர்கள் பாப்தாதாவுக்கு முன்னால் வந்து கொண்டிருக்கிறார்கள். யக்ஞத்தைப் பாதுகாப்பவர்களின் மிகப்பெரிய கடமை யாகும் என்பதால் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, குறிப்பாக பாப்தாதா யாரெல்லாம் மேலே ஏதேனும் சேவைக்காக அமர்ந்துள்ளார்களோ, ஞான சரோவரிலோ, பாண்டவ பவனிலோ அல்லது சாந்திவனத்தில் யாரெல்லாம் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டிருக்கிறார் களோ, அவர்களுக்கு பாப்தாதா விசேஷமாக யாத் ப்யார் (அன்பு நினைவு) கொடுத்துக் கொண்டிருக்கிறார். அனைவரும் நன்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். நல்லது - இந்த தேசம் மற்றும் அனைத்து தேசங்களைச் சேர்ந்தவர்கள் அனைவரும் யாரெல்லாம் யாத் ப்யார் அனுப்பியிருக்கிறார்களோ, அவர்கள் புரிந்து கொள்ளட்டும் -- நமக்கு விசேஷ ரூபத்தில் பாப்தாதா நினைவு கொடுத்திருக்கிறார். நல்லது.

வரதானம் : பழைய சம்ஸ்காரம் மற்றும் உலகத்தின் உறவுகளின் கவர்ச்சியிலிருந்து விடுபட்டு இருக்கக் கூடிய டபுள் லைட் ஃபரிஸ்தா ஆகுக.

ஃபரிஸ்தா என்றால் பழைய உலகின் கவர்ச்சிகளில் இருந்து விடுபட்டவர், சம்பந்த ரூபத்திலும் கவர்ச்சி இருக்கக் கூடாது, தனது தேகம் அல்லது எந்த ஒரு தேகதாரி மனிதர் அல்லது எந்த ஒரு பொருளின் பக்கமாகவும் கவர்ச்சி இருக்கக் கூடாது. அதே போல் பழைய சம்ஸ்காரங்களின் கவர்ச்சியில் இருந்தும் விடுபட்ட நிலை - சங்கல்பம், உள்ளுணர்வு மற்றும் வார்த்தையின் ரூபத்தில் எந்த ஒரு சம்ஸ்காரத்தின் கவர்ச்சியும் இருக்கக் கூடாது. எப்போது அந்த மாதிரி அனைத்துக் கவர்ச்சிகளில் இருந்தும் அல்லது வீணான சமயம்,

வீணான சகவாசம், வீணான சூழ்நிலையில் இருந்தும் விடுபட்டு இருப்பீர்களோ, அப்போது டபுள் லைட் ஃபரிஸ்தா எனச் சொல்லப் படுவீர்கள்.

சுலோகன்: சாந்தியின் சக்தி மூலம் ஆத்மாக்கள் அனைவருக்கும் பாலனை செய்பவர்கள் தாம் ஆன்மிக சமூக சேவகர் ஆவார்.